☐ முதலாம் பதிப்பு : 1992, யூன், 1
☐ இரண்டாம் பதிப்பு : 1994, ஜனவரி, 25
☐ (C) MRS. KAMALA KUNARASA, B. A. (CEY), DIP. IN. ED.
☐ அச்சுப்பதிவு : மஹா லக்ஷமி அச்சகம், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## முன்னுரை

'படவேலை' என்ற இந்நூல் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக ஆக்கப்பட்டுள்ளது. 1;50,000 என்ற அளவுத் திட்ட மெட்றிக் இடவிளக்கவியல் பற்றிய விளக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. புதிய பாடத்திட்டத்திற்கு இணங்க இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. புவியியல் விளக்கத்திலிருந்து புவியியல் நிலத்தோற்றத்தை எவ்வாறு வரையலாம் என்பதனைப் படிப்படியாக விளக்குகின்றது.

மாணவர்களதும் ஆசிரியர்களதும் கவனத்திற்கு இலங்கை நிலவளவைத் திணைக்களம் வெளியிட்ட 1:50,000 மெட்றிக் இடவிளக்கவியற் படங்களில் சமவுயரக் கோடுகள் இன்னமும் 'அடி' யிலே காட்டப்பட்டுள்ளன. உயரம் மீற்றர் அலகுக்கு மாற்றப் படவில்லை என்பதும் கருத்திற்கொள்க. ஆனால் பரீட்சைக்குக் கேட்கப்படும் வினாவில் சமவுயரிகள், மீற்றரளவில் கேட்கப்பட்டு வருகின்றன என்பதையும் கவனத்திற்கொள்க. கல்வியுலகு மகிழ்வுடன் இந்நூலை வரவேற்கும் என நம்புகின்றேன்.


'கமலம்'
82, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

க. குணராசா

### விற்பனையாளர்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 1.4. 1:50,000 நேர்கோட்டளவுத்திட்டம்


## 1. 3. 2. திசை

தேசப்படங்களில் திசை குறித்தல் மிக முக்கியமானது. திசையில்லாத படங்களை உண்மையில் உபயோகிக்க முடியாது. படங்களில் வடக்குத் திசையை மட்டுமே குறித்தல் ஒரு மரபு. படங்களில் அத்திசை அம்புக்குறியினால் காட்டப்படும். (படம்: 1. 5)




படம்: 1. 5. வடதிசை குறிக்கும் விதம்

திசைகள் முழுவதையும் படங்களில் குறித்துக் காட்டுவதில்லை. வடக்குத் திசையைக் குறித்துக் காட்டுவதன் மூலம் ஏனைய திசைகளை ஊகித்தறிந்து கொள்வது புவியியல் மாணவர்களுக்குச் சிரமமான காரியமன்று. (படம்; 1. 6)




படம்: 1. 6. திசைகள்

இடவிளக்கவியற் படங்களில் ' மூன்று விதமான வடக்குத் திசைகள் ' குறித்துக்காட்டப்படுகின்றன. இந்நூலின் நடுப்பக்க வர்ணப்படத்தின் வடகிழக்கு மூலையில் பாருங்கள். அந்த மூவகை வடக்குத் திசைகளும் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1.3.2.1. உண்மை வடக்கு (True North) உ. வ (TN)

1.3.2.2. காந்த வடக்கு (Magnetic North)/ கா . வ . (MN/

1.3.2.3 அளியடைப்பு வடக்கு (Grid North) / அ.வ. (GN)

### 1. 3. 2. 1 உண்மை வடக்கு:

இந் நூலின் நடுப்பக்க வர்ணப் படத்தின் வடகீழ் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் நிலைக்குத்துத் திசைக்கோடுகளில் உ.வ. என்ற கோடு உண்மை வடக்கைக் குறிக்கின்றது; இதனைப் புவியியல் வடக்கு எனவும் வழங்குவர். உண்மை வடக்கு என்பது பூமியில் வடமுனைவு அமைந்துள்ள திசையைக் குறிக்கும். காந்தத்திசைகாட்டி கண்டுபிடிக்கப்பட முன்னர் கப்பலோட்டிகள் திசையறிவதற்கு முனைவுடு என்ற நட்சத்திரத்தை ஆதாரமாகக் கொண்டனர். வடவரைக்கோளத்தின் எப்பகுதியில் இருந்தும் இந்த நட்சத்திரத்தைக் காணமுடியும். முனைவுடு எந்நிலையிலும் திசைமாறுவது கிடையாது. உண்மை வடக்கையே முனைவுடு எப்போதும் காட்டும். (படம்: 1. 7)




படம்: 1, 7. முனைவுடு

### 1. 2. 2. 2. காந்த வடக்கு:

திசையறிகருவியிலுள்ள காந்தஊசி காட்டும் வடக்கு, காந்தவடக்கு எனப்படும். (படம்: 1 8) புவியின் வடமுனைவுக்கு அண்மையில் ஒரு காந்த வலயம் உண்டு. அது காந்தவியல்புடையது அதனால் திசையறிகருவியிலுள்ள காந்த ஊசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அக்குறுக்குப் பக்கப் பார்வை எவ்வாறு சமவுயரக் கோட்டுத் தோற்றமாக மாறுகின்றது. என்பதனையும் அப்படம் விளக்குகின்றது.

## உயர இடைவெளி:

இரு சமவுயரக் கோடுகளுக்கு இடையேயுள்ள உயர இடைவெளி இன்னதாகத்தான் இருக்கவேண்டும் என்ற நியதி கிடையாது. இலங்கை நிலவளவீட்டுப் பகுதியினர் தமது இடவிளக்கவியற் படங்களில் 100 m உயர வேறுபாட்டையே சமவுயரக் கோட்டிடை வெளியாகக் கொண்டுள்ளனர். பிரித்தானிய இடவிளக்கவியற் படங்கள் பெரிதும் 50 m யை சமவுயரக் கோட்டு உயர இடைவெளியாகக் கொண்டுள்ளன. ஒரு பிரதேசத்தினைப் பெரிதாகப் படத்தில் வரைவதாயின் சமவுயரக் கோட்டிடை வெளியைச் சிறியளவில் 20 m அல்லது 100 m என எடுத்துக் கொள்வர். ஒரு பிரதேசத்தினைச் சிறிதாகப் படத்தில் வரைவதாயின் சமவுயரக்கோட்டிடைவெளி எண்ணைக் கூடியதாக எடுத்துக்கொள்வர்.


## வரையும் முறை:

சமவுயரக்கோடு என்றால் என்ன? அது எவ்வாறு வரையப்படுகிறது?. என்பவற்றை நாம் சில பயிற்சிகள் மூலம் தெளிவாக விளங்கிக்கொள்ளல் சாத்தியம். படம்: 2.3-ல் ஒரு நதியும் அதனைச் சுற்றிவரவுள்ள பிரதேசத்தினது இடவுயரங்களும் குறிக்கப்பட்டுள்ளன.




படம்: 2.3 ஒரு பிரதேசத்தில் இடவுயரங்கள் குறிக்கப்பட்டுள்ளன,

277 m உயரத்திலிருந்து 1080 m உயரம்வரை இடவுயரங்கள் வேறுபடுகின்றன. 100 m உயர இடைவெளி கொண்ட சமவுயரக் கோடுகள் மூலம் இப்பிரதேசத்தின் சமவுயரக் கோட்டுத் தோற்றத்தினைக் காட்ட வேண்டுமெனக் கொள்வோம். இப்படத்தில் வரையவேண்டிய முதலாவது சமவுயரக்கோடு 300 m கோடாகும். ஏனெனில் ஆகக் குறைந்த உயரம் 277 m ஆகும். இந்த 300 m சமவுயரக்கோடு. 201 m இடவுயரங்களுக்கும் 301 m இடவுயரங்களுக்கும் இடையில் அமைதல் வேண்டும் என்பது தெரிந்தே. அவ்வாறு 400 m சமவுயரக் கோடு 301 m இடவுயரங்களுக்கும் 401 m இடவுயரங்களுக்கு இடையேயும், 500 m சமவுயரக்கோடு 401 m இடவுயரங்களுக்கும், 501 m இடவுயரங்களுக்கு இடையேயும் அமையும்.





படம்: 2.4 இடவுயரங்களிடையே வரையப்பட்ட சமவுயரக்கோடுகள்

அவ்விதமே ஏனைய பிற சமவுயரக்கோடுகளும் அமையும். படம் 2.3ல் இடவுயரங்கள் குறித்துக் காட்டப்பட்ட பிரதேசத்தினைச் சமவுயரக் கோடுகளை வரைந்து தெளிவுபடுத்தினால் அது படம். 2.4-ல் காட்டியவாறு அமையும்.

படம் 2.5-ல் ஒரு பிரதேசத்தின் இடவுயரங்கள் குறிக்கப்பட்டிருப்பதோடு அவ்விடவுயரங்கள் இடையே சமவுயரக் கோடுகளும் வரையப்பட்டிருக்கின்றன. அச்சமவுயரக் கோடுகள் ஒவ்வொன்றினதும் இலக்கப் பெயர்களைச் சரியாக எழுதிக்கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 2.5 இடவுயரங்களிடையே வரையப்பட்ட சமவுயரக்கோடுகள் இலக்கப் பெயர்களைக் குறிக்க.

## எழுத்திடும் முறை

சமவுயரக் கோடுகள் ஒவ்வொன்றினதும் இலக்கப் பெயரை எழுதுவதற்கு ஓர் ஒழுங்குமுறை உள்ளது.


(1) சமவுயரக்கோட்டு இலக்கங்களை எழுதும்போது குறைந்த உயரத்திலிருந்து உயர்ந்த உயரத்தை நோக்கி எழுதவேண்டும். படம் 2.6 இல் எழுத்திட்ட முறையைக் கவனிக்கில் இது புலனாகும்.




படம்: 2.6 எழுத்திடும் முறை

(அ) தவறான முறை (ஆ) சரியான முறை

படம் 2.6 - இலும் அவ்வெழுத்திடும் முறை விளக்கப்பட்டுள்ளது. படம் 2.6 அ-இல் எழுத்திட்டமுறை வாசிப்பதற்கு இலகுவானதாய் இருப்பினும் தவறானது. படம் 2.6ஆ-இல் எழுத்திட்டமுறை வாசிப்பதற்கு கடினமாக இருப்பினும் சரியானது. எழுத்திடும்போது படத்தில் காட்டியவாறு சம வுயரக் கோட்டின் இடையில் எழுதிக்கொள்ளலாம்.




படம்: 2,7 எழுத்திடும் பிறிதொரு முறை

(அ) தவறான முறை (ஆ) சரியான முறை

(2) சமவுயரக் கோட்டிடையில் எழுதாவிடில் பிறிதொரு வகையிலும் எழுதிக்கொள்ளலாம், படம் 2.7-இல் காட்டியுள்ளவாறு சமவுயரக்கோட்டின் மேல் எழுதிக் கொள்ளலாம். அவ்வாறு எழுதும்போது முதல்விதி கவனிக் கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

